## O.S.No. 262/2015

## Date:19.06.2019

**வாதி தரப்பு சாட்சி 3- அசோகன் த.பெ.பெரியபுலியன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

முத்துசெல்லனுக்கு ஒரே வாரிசு என்றால் சரிதான். என் தந்தை பெரியபுலியனின் உடன் பிறந்தவர் இல்லை என்றால் சரிதான். நான் பெரியபுலியனுக்க தூரத்து உறவினர் என்றால் அவர் என் பாட்டன் முத்துசெல்லனின் சமாதி எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். முத்துசெல்லன் உயிருடன் இருக்கும் போது அந்த சமாதி கட்டப்பட்டது என்றால் சரிதான். சமாதியில் அவரது இறப்பிற்கு பின் பூஜை நடத்தும் பொருட்டு யாருக்கும் சொத்து எழுதி வைக்கப்ட்டதாக தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்தின் புல எண் தெரியுமா என்றால் /4ல் 5ல் 9 செண்ட். பூஜை நடத்தும் இடம் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் அழகுபண்டாரத்தின் வாரிசுக்கு எழுதி கொடுக்கப்பட்டது. அது தவறு என்றால் சரியல்ல. அங்கு எப்போது பூஜை நடக்கும் என்றால் காலை 5மணி மற்றும் மாலை 6.00 மணிக்கு சங்கு ஊதி பூஜை நடத்துவார்கள். நிலம் பூஜைக்காக எழுதி கொடுக்கப்ட்டதா என்றால் ஆம். பூஜை சரிவர செய்யவில்லை என்றால் வாரிசுதாரர் வெளியேற வேண்டும் என்றால் சரிதான். பூஜை சரியாக செய்யப்படாமல் இருந்து நான் கண்டித்துள்ளேனா என்றால் பூஜை சரிவர நடந்தது. பூஜை சம்பந்தமாகவும் அந்த சொத்து சம்பந்தமாகவும் எனக்கு எந்த தொடர்பம் கிடையாது என்றால் சரியல்ல, அது என் பாட்டன் சொத்து. முத்துசெல்வனின் ஒரே வாரிசு பெரியபுலியன் என்றால் சரிதான். பெரியபுலியனுக்கு ஒரே வாரிசு ஆனந்தாயி என்றால் பெரியபுலியனுக்க 3 மனைவி உண்டு அதில் முன்றாவது மனைவி தான் ஆனந்தாயி பெரியபுலியன் இறக்கும் போது அவருடைய ஒரே வாரிசு ஆனந்தாயி என்றால் சரிதான். ஆனந்தாயி இறந்த பிறகு அவருடைய வாரிசுகளாகிய சீனிவாசன், சசிகுமார் ஆகியோருக்கு தான் அந்த சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல, ஆனந்தாயின் அண்ணன் மகன்கள் தான் சீனிவாசன் மற்றும் சசிகுமார். ஆனந்தாயி தன் சொத்தை சீனிவாசனுக்கும் சசிகுமாருக்கம் தான் எழுதி வைத்தார்கள் என்றால் தெரியாது. எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமும் இல்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு - விசாரணை இல்லை